## 1. நிதிக் கூற்றுக்கள

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலன்னறுவை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான சொத்துக்கள் பெறுப்புக்கள் பற்றிய கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று/உரிமை மூலதனம் மாற்றமடைதல் பற்றிய கூற்று , காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அளவு ரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) பிரிவு 219 மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தி வரையான விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான பொலன்னறுவை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அது தொடர்பாக நிர்வகிக்கும் தரப்பினர்களதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினர்களுக்கு உரியதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு

தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடய எல்லை (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக இல்லாத போதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்புடைய வெளிக்கொணர்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரை மற்றும் தேவையான எச்சந்தர்ப்பத்திலும் பின்வரும் விடயங்கள் பற்றிப் பரிசோதிப்பதற்காக கணக்காய்வு விடய எல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது மாநகர சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கு இயலுமானவாறு அதன் ஒழுங்கமைப்பு, முறைமை, நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் அளவு ரீதியாகவும் திட்டமிடப்பட்டுள்ளதா என்பது பற்றி மற்றும் குறித்த முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணப்பட்டு வருகின்றனவா என்பது பற்றி;

- ஏற்புடைய எழுதப்பட்ட சட்டம் அல்லது மாநகர சபையால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட உத்தரவுகளுக்கு அமைவாக பிரதேச சபை செயற்பட்டுள்ளதென,
- தனது அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதென,
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாக மற்றும் பயனுள்ளவாறு கால வரையறைக்குள் மற்றும் ஏற்புடைய சட்டவிதிகளுக்கு அமைவாக பெறுகைச் செயன்முறை மேற்கொண்டு பயன்படுத்தப்பட்டள்ளதென.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் அவதானிப்புக்கள் தவிர்ந்த முன்னைய ஆண்டு என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வட மத்திய மாகாண மாநகர சபைகளின் நிதி நிர்வாக விதிகள் 97 பிரகாரம் மாநகர சபை ஒன்று தயாரித்த வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடங்கும் தகவல்கள் அதற்கு ஏற்புடைய காலப் பிரிவுக்கான நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் நீடிப்பு வருமானக் கூற்றில் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் வரவுசெலவுத் திட்டத்தில் உள்ள தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென மாநகர சபையின் நிதிக் கூற்றுக்களுடன் வரவுசெலவுத் திட்டத்தில் உள்ள தகவல்கள் சமர்ப்பிக்ப்பட வேண்டிய போதும் மீளாய்வு ஆண்டில் அவ்வாறு செய்யப்படவில்லை. | வரவுசெலவுத் திட்டத்தில் உள்ள தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதி நிர்வாக விதிகள் 96 பிரகாரம் மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்டுள்ள காசுப் பாய்ச்சல் கூற்றில் முன்னைய ஆண்டுக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென | ஒப்பீட்டு நோக்குவதற்காக முன்னனைய ஆண்டுக்கான தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும் |

## 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு தொடர்பில் 2024 ஆம் ஆண்டு கொடுப்பனவுகள் செலுத்தப்பட்ட ரூபா.5,711,655 செலவு மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் அட்டுறு செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | அட்டுறு அடிப்படையில் கணக்குகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | பொலனறுவை வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள வாகன தரிப்பிடத்திற்கான மீளாய்வாண்டு தொடர்பான வருமானம் ரூபா.1,545,000 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் ரூபா.2,000,000 ஆக காட்டப்படல் காரணமாக வருமானம் ரூபா.455,000 வால் அதிகரித்துக் காட்டப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | அட்டுறு அடிப்படையில் கணக்குகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் |
| (இ) | 2021 ஆம் ஆண்டு மாநகர சபை அதிகார பிரதேசத்தில் நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு பணிகள் நிறைவு செய்யப்படாது கைவிடப்பட்ட 04 இலத்திரனியல் நூலகங்களுக்காக செலவு செய்துள்ள ரூபா.4,262,832 பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நடைமுறை வேலைகளின் கீழ் குறைவேலை சொத்துக்கள் காட்டப்படல் வேண்டும் |
| (ஈ) | ரூபா.1,842,418 மாநகர சபைக்குச் சொந்தமான பால் விற்பனை நிலையத்தின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | அனைத்து சொத்துக்களும் கணக்குகளில் பதிவு செய்யப்படல் வேண்டும் |
| (உ) | மீளாய்வாண்டில் ரூபா.125,400 ஒரு தொகை வீதி விளக்கு உபகரணங்கள் கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | கையிருப்பின் பெறுமதி சரியாக கணக்குகளில் பதிவு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன சீராக்கம் மறைப் பெறுமான காசுப் பாய்ச்சலாக காட்டப்பட வேண்டிய விடயங்களின் குறைவு ரூபா.7,630,868 நேர்ப் பெறுமான காசுப் பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதாக | சீராக்கங்கள் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கும் தீயணைப்பு வாகனத்தின் வாடகை மற்றும் கைத்தொழில் கடன்படுநர் மீதிகளில் ரூபா.3,559,862 பெறுமதி அதற்கு ஏற்புடைய பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரம் இணங்காதிருந்தது. | நிதிக் கூற்றுக்களின் மீதி மற்றும் எல்.ஜீ.06 உப அட்டவணைப் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கு ஏடுகள் ஒப்பீடு செய்யப்பட்டு பெறுமதிகள் காட்டப்படல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப் பிரமாண இல. 395(இ) | மீளாய்வாண்டில் வங்கிக் கணக்கு ஒன்று தொடர்பில் வங்கி இணக்க கூற்று தயாரித்தல் 01 முதல் 10 மாதம் வரை தாமதமடைந்தது. | பணியாட்டொகுதி குறைபாடு காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | 2023 திசெம்பர் 31 இல் வழங்கப்பட்ட போதும் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காலம் 06 மாதங்களைக் கடந்துள்ள மொத்த பெறுமதி ரூபா.458,988 இற்காக 33 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானங்களை மிகைத்த செலவுகள் ரூபா.712,753 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானங்களை மிகைத்த செலவுகள் ரூபா.29,640,178 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** |
| | | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** |
| (i) | வீதவரியும் வரியும் | 26,733,000 | 26,733,000 | 20,418,712 | 37,049,975 | 28,984,000 | 28,984,000 | 26,338,179 | 30,735,687 |
| (ii) | வாடகை | 114,628,000 | 114,628,000 | 97,243,281 | 91,116,872 | 84,343,000 | 84,343,000 | 59,173,832 | 73,732,153 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 6,600,000 | 6,600,000 | 6,600,000 | - | 6,100,000 | 6,100,000 | 3,946,004 | |
| (iv) | ஏனைய வருமானம் | 75,816,000 | 75,816,000 | 64,964,967 | 15,937,033 | 63,446,000 | 63,446,000 | 18,093,574 | 5,086,000 |
| | | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- | ------------- |
| | | 223,777,000 | 223,777,000 | 189,226,960 | 144,103,880 | 182,873,000 | 182,873,000 | 107,551,589 | 109,553,840 |
| | | ======== | ======== | ======== | ======== | ======== | ======== | ======== | ======== |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றுகை

சபையின் வருமானச் சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையில் கருத்து தெரிவித்தல்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி** | | |
| (i) | மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட வேண்டிய வருமானம் ரூபா.57,468,581 மற்றும் நிலுவை வீதவரி வருமானம் வீதவரி வருமானம் ரூபா.37,049,574 ஆக இருந்ததனால் வருமானத்தில் 64 சதவீதம் நிலுவை வருமானமாக காணப்பட்டது. | இத் தொகையை அறவிடுவதற்காக சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டு வருவதுடன் அவ்வாறு செலுத்த தவறுபவர்களுக்காக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் கீழ் அனுமதிப் பத்திரம் சமர்ப்பிப்பதாக | உரியவாறு வருமானம் சேகரித்தல் வேண்டும் |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டுக்காக சேகரிக்கப்பட வேண்டிய ரூபா. 188,360,153 வருமானத்தில் ஆண்டில் | பொலனறுவை மாநகர சபைக்குச் சொந்தமான கடை அறைகள் 2020 ஆம் ஆண்டு சனவரி முதல் | உரியவாறு வருமானம் |

| | | | |
|---|---|---|---|
| | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா. 97,243,281 அதாவது 51 சதவீதமாக காணப்பட்டது. | மதிப்பீட்டுத் திணைக்களம் மூலம் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு காரணமாக கடை வாடகை அதிகரித்தமையால் கடை உரிமையார்களால் செலுத்த முடியாது போனதுடன் அந்த கடை வாகைகள் பகுதி பகுதியாக செலுத்தப்படுவதாகவும் பொலனறுவை சந்தைத் தொகுதி தொடர்பில் நடாத்தப்படும் விசாரணையின் பின்னர் அந்த குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் கடை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சேகரித்தல் வேண்டும் |
| (ii) | மாநகர சபைக்குச் சொந்தமான 149 கடை அறைகள் தொடர்பான ரூபா.16,238,205 நிலுவைத் தொகை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | உரியவாறு வருமானம் சேகரித்தல் வேண்டும் |
| (iii) | சொத்துக்களை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் நீண்டகாலமாக அறவிடப்படாத ரூபா. 4,213,112நிலுவை 2023 திசெம்பர் 31 வரை தீர்க்கப்படவில்லை. | தற்போதுள்ள நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | உரியவாறு நிலுவை வருமானம் சேகரித்தல் வேண்டும் |
| **(ஈ)** | **ஏனைய வருமானங்கள்** | | |
| | மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் நிலுவை கழிவுப்பொருள் கட்டணம் ரூபா. 10,943,500 ஐ தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உண்மையாகவே கழிவுகளை வழங்கும் நிறுவனங்கள் தொடர்பில் கண்டறிந்து பொதுச் சுகாதார பரிசோதகரின் பரிந்துரையுடன் நிர்வாகக் குழுவின் அனுமதியின் கீழ் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | கழிவு வரி வருமானத்திற்காக பட்டியல் தயாரித்தல் கழிவு சேகரிக்கும் சேவையின் பிரகாரம் இடம்பெறல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

மாநகர சபை அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| **<u>கைவிடப்பட்ட பணிகள்</u>** | | |
| ரூபா.4,262,832 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட 04 இலத்திரனியல் நூலங்கள் 2024 மே மாதம் வரை எதிர்பார்க்கப்பட்ட பயனைப் பெறாது கைவிடப்பட்டிருந்தது. | பணிகளை நிறைவேற்றலை 2024 வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படும் என. | நிறுவப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலனறுவை மாநகர சபைக்குச் சொந்தமான காணிகளில் பொருத்தப்பட்டுள்ள தொலைபேசிக் கோபுரங்கள் தொடர்பில் வருமதியாக உள்ள வாடகைத் தொகையில் ரூபா.2,038,483 வாடகைத் தொகை நிலுவையாக காணப்பட்டதுடன் அவை தொடர்பான ஒப்பந்தங்கள் இற்றைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தல் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. | ஒப்பந்தங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதுடன் இறடறைப்படுத்துவதற்கும் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | துரிதமாக நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டியதுடன் ஒப்பந்தங்களை இற்றைப்படுத்தி ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளல் வேண்டும் |
| (ஆ) | பொலனறுவை புதிய சந்தை தொகுதிக்கு (PCC) பின்புரத்தில் குத்தகைக்கு வழங்க முடியுமான 41 கடை அறைகளுள் 31 கடை அறைகள் ஒப்பந்தம் மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 10 கடை அறைகள் குத்தகைக்கு வழங்கப்படாமை காரணமாக 2021 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் கணக்காய்வுத் திகதியான 2024 பெப்ரவரி வரை சபையால் இழக்கப்பட்டுள்ள வருமானம் ஏறத்தாள ரூபா.6,200,000 ஆக காணப்பட்டது. | கடை அறைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | தற்போதுள்ள சொத்துக்களை பயனுள்ளவாறு பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2020 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள பொலனறுவை மாநகர சபையின் 57 கடை அறைகளுக்கான நிலுவை குத்தகைத் தொகை ரூபா.52,918,053 ஆக காணப்பட்டதுடன் இந்த 57 கடை அறைகளுள் 06 கடை அறைகள் 2024 பெப்ரவரி மாதம் முத்திரையிடப்பட்ட போதும் எஞ்சிய 51 கடை அறைகள் தொடர்பில் ஒப்பந்தத்தின் பிரிவு 20 மற்றும் பிரிவு 22 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் பின்னர் வழங்கப்படும் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதாக | ஒப்பந்தம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பொலனறுவை மாநகர சபைக்குச் சொந்தமான பொது சந்தை தொகுதி, பஸ் நிலைய கடை அறைகள் மற்றும் வைத்தியசாலைச் சந்தி கடை அறைகள் தொடர்பில் சபைக்கு வருமதியாக உள்ள ரூபா. 15,964,890 தொகையை (key money) அறவிடுவதற்காக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நீண்டகாலமாக நிலவும் இந்த நிலுவைத் தொகையினை தவணை அடிப்படையில் செலுத்துவதாகவும் கொடுப்பனவு செலுத்த வறும் நபர்கள் தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (உ) | 2024 சனவரி மாத வங்கி இணக்க கூற்று பிரகாரம் 2020 செப்டம்பர் 30 முதல் 2023 திசெம்பர் 14 வரை 60 சந்தர்ப்பங்களில் வங்கி கணக்கிற்கு நேரடியாக வைப்பில் இடப்பட்டுள்ள ரூபா.2,110,470 இனம் காணப்படாத றெுவனவுகள் தீர்க்கப்படாதிருந்தது. | னம் காணப்படாத றெுவனவுகளை இனம் காண்பதற்கு வங்கியிடம் உதவி கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக | நேரடி வைப்புகளை துரிதமாக இனம் கண்டு வருமானத் தலைப்புகளுக்கு செலவு வைத்தல் வேண்டும். |
| (ஊ) | 2022 ஆம் ஆண்டு சுயதொழில் கருத்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா.926,600 ஒதுக்கீடுகள் ஏற்புடைய பணிகளில் ஈடுபடுத்தப்படாது நானாவித ஒதுக்கீடுகளின் கீழ் காட்டப்பட்டது. | கண்டறிந்து எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதாக | கிடைக்கும் ஒதுக்கீடுகளை ஏற்புடைய பணிகளில் ஈடுபடுத்தல் வேண்டும். |

## 3.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| 4 எல விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள பால் விற்பனை நிலையத்தில் 2022 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய ஒப்பந்தத்தின் குத்தகை ஒப்பந்தக்காரர் சபை உறுப்பினர் ஒருவரின் உறவுக்கார மகன் எனவும் மற்றும் விற்பனை நிலையம் அந்த உறுப்பினரால் நடாத்திச் செல்லப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது. பால் விற்பனை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூ.1,842,418 தொகையான 247 சதுர அடிகள் கொண்ட கட்டடத்துககான நிர்மணிப்புத் திட்டம் சபையால் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்திட்டத்தின் பிரகாரம் நிர்மாணிப்பினை மேற்கொள்ளாது திட்டத்தில் உள்ளடக்கப்படாத அனுமதி பெறப்படாத நிர்மாணிப்பகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த பால் விற்பனை நிலையத்திற்காக மாதாந்த வாடகை ரூபா.2,000 தற்காலிக மதிப்பீட்டின் கீழ் கட்டணம் அறவிடல் | பால் விற்பனை நிலைய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போது ஒப்பந்தக்காரர் எந்தவொரு சபை உறுப்பினர் அல்லது பணியாட்தொகுதியினரின் உறவினர் அல்ல என்பது தென்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட வேண்டுமென பொதுச் சபையில் தீர்மானம் மேற்கொண்ட போதும் அந்த திட்டத்தை அங்கீகரிக்காமை காரணமாக நிர்மாணிக்கப்பட்ட திட்டத்தை அங்கரித்துக் கொள்ளுமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் திணைக்களத்தால் | மாநகர சபை ஊழியர்கள் அல்லது நகர உறுப்பினர்கள் எனக் கூறி மறைமுக ஒப்பந்த தொடர்புகளை ஏற்படுத்த முடியாது என்பதால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| காரணமாக மதிப்பீட்டுப் பெறுமதியில் 20 சதவீத தொகையினை அறவிடல் காரணமாக மீளாய்வாண்டில் சுமார் ரூபா.96,000 பெறுமதி சபையால் இழக்கப்பட்டதுடன் இவை ஏற்புடைய தரப்பினர்களுக்கு இடையில் இடம்பெற்ற சட்ட ரீதியற்ற ஒரு கொடக்கல் வாங்கல் என்பது அவதானிக்கப்படுகிறது. | மாதாந்தம் ரூபா.10,000.00 மாத வாடகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2024 சனவரி முதல் இத்தொகை அறவிடப்பட்டு வருகிறது. |

### 3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைப் பயன்பாட்டு ஆதனங்கள், பொருத்துக்களும் உபகரணங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா.12,054,532 மாநகர சபைக்குச் சொந்தமான 02 கட்டடங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | கதுறுவெல தமன கெலே உத்தியோகபூர்வ இல்லம் பழுதுபார்க்கப்பட்டுள்ளதுடன் தேவைப்பாட்டுக்கு அமைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். பழைய வாராந்த சந்தையின் கடை அறைகளின் உரித்தினை உறுதி செய்த நபர்களுக்கு வழங்கப்பட்டதுடன் உரித்து தொடர்பில் பிரச்சினைக்குரிய நிலைமை உருவாகியிருந்த கடை அறைகளை அச் சந்தர்ப்பத்தில் வழங்குவதற்கு முடியவில்லை. தற்போது அந்த கடை அறைகளின் உரித்து உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் கடை அறைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | அனைத்து சொத்துக்களையும் பயனுள்ளவாறு பயன்படுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சூழல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் அண்டுக்காக புதிதாக இனம் காணப்பட்ட சூழல் அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டிய 18 கைத்தொழில்களுக்கு சூழல் அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை. | சூழல் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாத நபர்கள் தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படம் என. | சூழல் அனுமதிப் பத்திரம் வழங்கும் செயன்முறை முறைமைப்படுத்தப் படல் வேண்டும். |